# காலிங்கராயனுக்கு சிலை அமைக்க உத்தரவு பொதுமக்கள் பட்டாசு வெடித்து வரவேற்பு

பவானி, செப். 20: ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகள் பாசனம் பெற பல்வேறு பணிகளை நேற்கொண்டவர் காலிங்கராயன். பவானி ஆறு காவிரியில் கலக்கும் இடத்திற்கு சற்று முன் னதாக அணையைக் கட்டி கால்வாய் வெட்டியவர் லிங்கையன் என்கிற காலிங்கராயன்.

இந்த வாய்க்கால் பாசனம் மூலம் ஈரோடு மாவட்டத்தில் 15,743 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. தனது சொந்தச் செலவில் அணைகட்டி முன்னோடியாக விளங்கிய காலிங்கராயனுக்கு சிலை அமைக்க வேண்டும், காலிங்கராயன் அணைக்கட்டை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும் என காலிங்கராயன் கொங்கு வேளாளர் அமைப்பு, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி மற்றும் பொதுமக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தனர்.

இது குறித்து கடந்த மாதம் பாசன அணை திறப்பு விழாவுக்கு வந்த பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம், வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித் தலைவர் சண்முகத்திடம் பொதுமக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், அணை நாசுவம்பாளையம் பகுதியில் காலிங்கராயன் சிலை அமைக்கவும், காலிங்கராயன் அணைக்கட்டு சுற்றுலா தலமாகவும் அறிவித்து முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அறிவிப்பு வெளியானதும் அணை பகுதியில் ஈரோடு மாநகராட்சி துணை மேயர் பழனிச்சாமி தலைமையில் பொதுமக்கள் காலிங்கராயன் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

சித்தோட்டு பேரூராட்சித் தலைவர் வரதராஜன், காலிங்கராயன் கொங்கு வேளாளர் அமைப்பு தலைவர் ராமசாமி, செயலாளர் சோமசுந்தரம், பொருளாளர் சக்திவேலு, எலவபாலை கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவர் மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோன்று கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி சார்பிலும் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் துரைராஜா தலைமை தாங்கினார். மாவட்ட தொண்டரணிச செயலாளர் மூர்த்தி, ஒன்றியச் செயலாளர் ஸ்ரீதர், பவானி கொங்கு வேளாளர் சமூக நலச்சங்கச் செயலாளர் அல்லிமுத்து, ஒன்றியச் செயலாளர் மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கப்பட்டது.